Embassy of the United States of America

Colombo

# PRESS RELEASE

Public Affairs Section

Tel: +94 (1) 249-8100 ● Fax: +94 (1) 244-9070

Email: shenjy@state.gov ● http://srilanka.usembassy.gov

Release No. 20160520T

## அனர்த்த நிவாரணத்திற்கு உடனடி உதவி வழங்கும் அமெரிக்கா

மே 20, 2016: இலங்கையின் பல்வேறு பகுதிகளில் நிலச்சரிவு மற்றும் வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டவர்களின் உடனடித் தேவைகள் எட்டப்படும் வகையில், அவசர மனிதநேய உதவியாக 7.2 மில்லியன் ரூபாய்களை (50,000 அமெ. டொலர்கள்) அமெரிக்கா வழங்கியுள்ளது. மிக அவசரமாக தேவையாகவுள்ள பொருட்களினை அளிப்பதற்கான ஒழுங்குப்படுத்தலில் இலங்கையின் தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் நிலையம் மற்றும் வேறு சர்வதேச உதவி பங்காளர்களுடன் இணைந்து சர்வதேச அபிவிருத்திக்கான ஐக்கிய அமெரிக்க நிறுவனம் (USAID) செயற்பட்டு வருகின்றது.

போர்வைகள், படுக்கைகள், ஆடைகள், மற்றும சுகாதாரப் பொதிகள், போன்ற அவசரகால உணவுசாராப் பொருட்கள வழங்குவதற்கு இந்த அமெரிக்க உதவியானது வழங்கப்பட்டுள்ளது. இலங்கை அதிகாரிகளின் விரிவான முயற்சிகளுக்கு இந்த உதவியினை எந்தளவு சிறப்பாக கொண்டு சேர்ப்பது என்பதனை தீர்மானிப்பதில் அமெரிக்க தூதரகமானது தொடர்ந்து அவர்களுடன் ஒருங்கிணைப்பினை முன்னெடுக்கும்.

“பாதிக்கப்பட்டுள்ள பிரதேசங்களில் உள்ள குடும்பங்களும், சமூகங்களும் மண்சரிவு மற்றும் வெள்ள அனர்த்தத்தில் இருந்து மீட்சிப் பெறுவதற்கு உடனடியான மற்றும் நீண்ட கால உதவி தேவையாக இருக்கும் என்பதனை நாம் அறிவோம்.” என அமெரிக்கத் தூதுவர் அதுல் கேஷப் ; கூறினார். “களத்தில் மிகவும் உடனடியாக தேவைப்படுவன என அடையாளம் காணப்பட்ட பொருட்களையே, இன்று அறிவிக்கப்பட்ட அமெரிக்க உதவித்தொகை வழங்கும். இந்த நிதியுதவியானது பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கும், குடும்பங்களுக்கும் உதவியளிக்கும். எமது முழுமையான ஆதரவினை நாம் தொடர்ந்து வழங்குவோம்” என அவர் மேலும் குறிப்பிட்டார்.